**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இரணியல்.**

**முன்னிலை: - திரு. மு. செந்தில்குமார், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

2023 - ம் ஆண்டு, மார்ச் திங்கள், 31 - ம் நாள், வெள்ளிக்கிழமை.

**வ.வி.எண்.4/2022**

**இன்**

**அசல் வழக்கு எண்.34/2008**

**கூடுதல் 2.** M. சதீஷ் ... மனுதாரர்/அதிகாரம் பெற்ற முகவர்

அவருக்காக வேண்டி, அவரது அதிகாரம் பெற்ற முகவர் M. வினு.

/எதிர்/

**1.** R. சசீலா

**2.** பொன்னாச்சி (இறப்பு)

**3.** P. பூமணி

**4.** P. பால்ராஜ்

**5.** P. ராஜ்

**6.** P. அழகேசன்

**7.** P. நேசமணி

**8.** P. மகேஷ்வரி

**9.** P. பாலகிருஷ்ணன்

**10.** P. லெட்சுமி ... எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது, 31.03.2023 அன்று இந்நீதிமன்றம் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/அதிகாரம் பெற்ற முகவர் தரப்பில் வழக்கறிஞர்.திரு.V.H.S.பிரதாப் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர். திரு. K.P.சிறில் ராஜ் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையில், மனுதாரர்/அதிகாரம் பெற்ற முகவர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு, எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரை ஆகியவற்றை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து வந்த, இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## உத்தரவு

**1.** இம்மனுவானது, கட்டளை 3 விதி 1 மற்றும் 2 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ், இந்த வழக்கின் 2 - ம் வாதிக்கு, தாம் அதிகார பூர்வமான முகவர் என தெரிவித்து, மனுதாரர் வினு என்பவர், இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

### 2. மனுவின் சுருக்கம் :

மனுவின் சாரம்சப்படி, இந்த மனுவானது, விளம்புகை பரிகாரம் மற்றும் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றும், இதில், 2 - ம் வாதி சதீஷ் அசல் வழக்கு எண்.34/2008 வழக்கில், 2 - வது வாதியாக இருப்பதாகவும், அசல் வழக்கு எண். 195/2010 வழக்கில், 3 - வது பிரதிவாதியாக இருப்பதாகவும், இந்த வழக்கில், அசல் வழக்கு எண்.34/2018 மற்றும் அசல் வழக்கு எண்.195/2010 வழக்குகளில், மேற்சொன்ன, சதீஷ்-க்காக வேண்டி மனுக்கள் தாக்கல் செய்யவும், வாய்மொழி சாட்சியம் அளிக்கவும், அதிகாரம் பெற்ற முகவர் என தம்மை அனுமதிக்கவும், இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

### 3. 10 - வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :

2 முதல் 9 வரையுள்ள எதிர்மனுதாரர்கள் அதை சுவிகரித்து கொள்ளுமாறு மனு தாக்கல் செய்துள்ளனர். எதிர்வழக்குப்படி, இந்த மனுவானது, சட்டத்தின்பால் நிலைக்கத்தக்கதல்ல என

எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர். மனுவில் தெரிவிக்கப்பட்ட சங்கதிகள் ஏற்றுக்கொள்ளப்பட கூடிய காரணங்கள் இல்லை என்றும், எதிர்மனுதாரர் தனது எதிருரையில் தெரிவித்துள்ளார்.

**4.** மேலும், இந்த மனுதாரர் சாட்சியாக விசாரிக்கப்படலாமே தவிர, 2 - ம் வாதிக்காக வேண்டி, 2 - ம் வாதி தெரிவிக்க வேண்டிய சங்கதிகளை அதிகாரம் பெற்ற முகவர் என்கின்ற கோதாவில் தெரிவிக்க இயலாது என்றும், இது குறித்து, மாண்பமை உச்சநீதிமன்றம் தமது சட்டநிலைப்பாட்டினை, *Janki Vashdeo Bhojwani & Another Vs Indusind Bank Ltd. & Others on 6 December, 2004* முன் தீர்ப்பில் தெரிவித்துள்ளது என்றும், மேலே தெரிவிக்கப்பட்ட முன் தீர்ப்பின் அடிப்படையில் பார்க்கும் பொழுது, சட்ட நிலைப்பாட்டினை கட்டளை 2 உரிமையியல் நடைமுறை சட்டத்தின்படி, வாதியர் அல்லாது பிரதிவாதியர் அவருக்கு பதிலாக சாட்சியம் அளிப்பதற்கான அதிகாரமாக அதை எடுத்துக் கொள்ள இயலாதென முன் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**5. <u>இரு தரப்பும் கேட்கப்பட்டது</u> :**

இந்த நீதிமன்றம், மனுதாரரால் தாக்கல் செய்துள்ள மனு, எதிர்மனுதாரரால் தாக்கல் செய்துள்ள எதிருரை ஆகியவற்றை தீர பரிசீலித்து, இந்த மனுவினை தீர்மானிக்க பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட போது, மனுவினை தாக்கல் செய்துள்ள மனுதாரர் வினு, வாதி சதீஷ்க்கு அசல் வழக்கு சகோதரர் என்பது, மனுதாரர் தாக்கல் செய்துள்ள அதிகார பத்திரத்தின் மூலமாக தெரிய வருகிறது. மேலும், மேற்சொன்ன அதிகார பத்திரத்தில், 2 - ம் வாதி சதீஷ் வெளிநாட்டில் வேலை செய்வதற்கான முகவரியையும் தெரிவித்து, அதிகார பத்திரத்தை எழுதிக் கொடுத்துள்ளார் என்பதும் தெரிய வருகிறது. இனி, இந்த நீதிமன்றம் முன்பாக சீரிய பரிசீலனைக்கு முன் இருக்கக் கூடிய சட்ட வினா என்பது, அதிகாரம் பெற்ற முகவர், 2 - ம் வாதிக்காக வேண்டி நேரடி சாட்சியம் அளிக்க இயலுமா? என்பதாகும். இதில், அதிமுக்கியமாக, இந்த நீதிமன்றம், அதிகார பத்திரத்தைப் பொறுத்து, அதில் கண்டுள்ள வாசகங்களையும், அதன் முக்கியத்துவத்தையும் காணும் பொழுது, தாவா சம்பந்தமாக

நிகழ்வுகளின் போது, அதிகாரம் பெற்ற முகவரான இந்த மனுதாரர் உடன் இருந்தார். ஆதலால், வழக்குப் பற்றிய விபரங்கள் அவருக்கு முழுமையாக தெரியும். இதன் காரணமாக, தம்மால் நேரடியாக நீதிமன்றத்தில் ஆஜராக முடியாத ஒரு சூழ்நிலையில், அதன் பொருட்டு, வழக்கு விபரங்களை தெரிந்து, அதிகாரம் பெற்ற முகவராக நியமிப்பதாக தெரிவித்து, இந்த வழக்கின் 2 - ம் வாதியான சதீஷ் அதிகார பத்திரத்தை எழுதிக் கொடுக்கவில்லை என்பது தெரிய வருகிறது. தாம் வெளிநாட்டில் இருப்பதாக தெரிவித்து, அதன் பொருட்டு, தாமாக வேண்டி இந்த வழக்கை மேற்கொண்டு நடத்துவதற்கு மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளது.

**6.** இந்த மனுவினை கடுமையாக எதிர்க்கும் எதிர்மனுதாரர்கள் வழக்கைப் பொறுத்து, தாம் குறுக்கு விசாரணை செய்வதற்கு அதிகாரம் பெற்ற முகவரிடமிருந்து பதில் பெற முடியாது என்றும், வழக்காடிகளுக்கிடையே இருந்து பெறப்படும் பதிலாக இருக்கக் கூடும். ஆதலால், இந்த மனுவினை அனுமதிக்க இயலாதென எதிர்மனுதாரர், தனது எதிருரையில் தெரிவித்துள்ளார். இந்த நீதிமன்றம், இந்த மனுவினைப் பொறுத்து, அதன் பொருண்மை நிலைப்பாட்டினை காணும் பொழுது, மனுவாதி தாக்கல் செய்துள்ள வழக்கைப் பற்றிய விபரங்கள், அதிகாரம் பெற்ற விபரங்கள் தெரிந்துள்ளதைப் பொறுத்து எவ்வித கருத்தும் காணப்படவில்லை. குறிப்பிட்ட அதிகாரம் பெற்ற முகவரின் விபரம் எதிர்வழக்காடிகளுக்கு தெரிந்துள்ளது என்பது ஆதார பூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக சாட்சியம் அளிக்க மாண்பமை உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. அதேவேளையில், இந்த வழக்கில், ஆதியில், இந்த வழக்கில் 2 - ம் வாதியானவர், அனுமதி மனு மூலமாக கட்சி சேர்க்கப்பட்டுள்ளார். மேலும், இந்த வழக்கீட்டு இணை வழக்கு 2010 - ம் வருடம் அசல் வழக்கு எண்.195/2010 என்கின்ற வழக்கும் நிலுவையில் உள்ளது. இந்த சூழ்நிலையில், இந்த வழக்கில், 2 - ம் வாதி நேரடியாக சாட்சியம் அளிக்காமல் தமது அதிகாரம் பெற்ற முகவர் மூலமாக வாதி என்கின்ற அதிகாரத்தில் சாட்சியம் அளிக்க இயலாதென இந்த நீதிமன்றம் மாண்பமை உச்ச நீதிமன்றம் சட்டநிலைப்பாட்டினை பின்பற்றி, இந்த மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என தீர்மானித்து தள்ளுபடி செய்கிறது.

**7. முடிவு :**

இம்மனு, செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2023 - ம் ஆண்டு மார்ச் திங்கள் 31 - ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.

மா.உ.நீ, இரணியல்.

**<u>வரைவு/சீரான உத்தரவு</u>**

வ.வி.எண்.4/2022

இன்

அசல் வழக்கு எண்.34/2008

தேதி 31.03.2023